# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவை (திருத்தச்) சட்டம்

---

*[1987 ஆம் ஆண்டு ஏப்பிறல் 16 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : சதம் 75

**1987 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவை (திருத்தச்) சட்டம்**

*[1987 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ.—ஓ. 14/86 (iv)

**தேசிய அரசப் பேரவையின் 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச்சேவை (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1985 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "மாநகரசபைகள், நகரசபைகள், அத்துடன் அபிவிருத்திச்சபைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாநகரசபைகள், நகரசபைகள், அபிவிருத்திச் சபைகள் அத்துடன் பிரதேச சபைகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது, "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

> " 'உள்ளூரதிகாரசபை' என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை, அபிவிருத்திச்சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் ;".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்